தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

**பெரியகுளம்**

பெரியகுளம் அருகே உள்ள லட்சுமிபுரத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நீர்வள, நிலவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

துணை வேளாண்மை இயக்குநர் முத்தையா முகாமிற்கு தலைமை வகித்தார். வேளாண் விற்பனைக்குழு செயலர் முருகன் முன்னிலை வகித்தார். லட்சுமிபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் வி.எல்.கே. ஜெயபாலன், தோட்டக்கலைக் கல்லூரி பேராசிரியர்கள் பாலகிருஷ்ணன், சுரேஷ், நபார்டு வங்கி மேலாளர் வெங்கட்ரமணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முகாமில் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளவேண்டிய பணிகள், மதிப்புக்கூட்டு பொருள் தயாரித்தல், சந்தைப்படுத்துதல், பதப்படுத்துதல் உள்பட பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

மேலும் இப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**நாற்றங்கால் விவசாயத்துக்கு முல்லைப் பெரியாற்றில் கூடுதல் தண்ணீர் திறப்பு**

**உத்தமபாளையம்**

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நாற்றங்காலுக்கு போதுமான அளவு தண்ணீர் வரத்து இல்லாத காரணத்தால், திங்கள்கிழமை (ஜூன் 9)முதல் முல்லைப்பெரியாற்றில் கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாக உத்தமபாளையம் பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்

'கம்பம் பள்ளத்தாக்கில் கோடை நெற்பயிர் விவசாயத்தை ஜூன் 1 ஆம் தேதியே

தொடங்கும் விதத்தில் மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும் இணைந்து நடைவடிக்கை மேற்கொண்டனர். இதன் விளைவாக ஜூன் 1 ஆம் தேதி மாவட்ட முல்லைப்பெரியாற்றில் இருந்து 200 கனஅடி தண்ணீர் நாற்றங்கால் பணிக்காக திறக்கப்பட்டது.

இதையடுத்து உத்தமபாளையம் பொதுப்பணித்துறை அலுவகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், தற்போது திறந்து விடப்பட்ட 200 கனஅடித்தண்ணீரால், அனைத்து நிலங்களுக்கும் தண்ணீரை கொண்டு செல்ல முடியவில்லை. ஒருபக்கம் நெல் நடவுப்பணிகள் தொடங்கும் போது, தண்ணீர் வரத்து இல்லாத பகுதிகளில் நாற்றங்கால் அமைக்கும் பணி மட்டுமே தொடங்கும் நிலை உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், இதனைத் தவிர்க்க அணையில் இருந்து 400 கன அடி தண்ணீர் திறக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப்பணித்துறையினர் கலந்து ஆலோசித்து, 300 கனஅடி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 300 கனஅடித் தண்ணீர் திறக்கப்பட்டது.

தற்போது பெரியாறு அணையில் இருப்பில் உள்ள 114 அடி தண்ணீரைக் கொண்டு, 20 நாள்களுக்கு மட்டுமே 300 கனஅடி தண்ணீர் வழங்கமுடியும். அதன்பின் தென்மேற்கு பருவமழை பெய்தால் மட்டுமே நடவுப் பணிகளை தொடங்க முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## மீன் வரத்து அதிகரித்தும் விலை குறையவில்லை

**திருவாடானை**

தொண்டியில் 45 நாள் மீன் பிடி தடைகாலத்திற்கு பிறகு மீன் வரத்து அதிகரித்தும் விலை குறையவில்லை.

தொண்டி பகுதியில் 45 நாள்கள் தடைகாலம் முடிந்து மீனவர்கள் மீன் பிடிக்க செல்கின்றனர். தற்போது மீன் வரத்து அதிகரித்துள்ளது மீனவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இருப்பினும் மீன் விலை குறையவில்லை. சில வகை மீன்களின் விலை அதிகரித்துள்ளது. வெலமீன் கிலோ ரூ.300, பாறை ரூ.350,

நண்டு ரூ.300, இவை அனைத்தும் மீன் பிடி தடைகாலத்தில் அதே விலையில் தான் இருந்தன. முரல் ரூ.400, சீலா ரூ.400, இரால் ரூ.450 என விலை அதிகரித்துள்ளது. எனவே அசைவ பிரியர்கள் கவலையடைந்துள்ளனர்.

**<u>கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை</u>**

**பல்லடம்**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 71 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.97, சென்னையில் ரூ. 3.32.

**<u>மயான தடுப்புச் சுவரால் விவசாய நிலம் பாதிக்கும்</u>**

**திருப்பூர்,**

மயானத்திற்கு தடுப்புச் சுவர் அமைப்பதால், காலம் காலமாக பள்ளத்தில் வெளியேறும் மழைநீர் தேங்கி தன்னுடைய விவசாய நிலம் பாதிக்கப்படும் என்றுகூறி, அதற்கு தீர்வு காண வலியுறுத்தி பல்லடம், பனிக்கம்பட்டியைச் சேர்ந்த பெண் விவசாயி சிவகாமி ஆட்சியர் கு.கோவிந்தராஜிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் முன்பாக பல்லடம், பனிக்கம்பட்டி ஊராட்சி, ரங்கசமுத்திரம், மாமரத்

தோட்டத்தைச் சேர்ந்த பெண் விவசாயி ஏ.சிவகாமி திடீரென் தரையில் அமர்ந்து, தான் ஏற்கெனவே அளித்த கோரிக்கை மனு தொடர்பாக உரிய தீர்வுகாண வலியுறுத்தினார்.

உடனடியாக அவர் அப்புறப்படுத்தப்பட்டார். இதையடுத்து, அவர் கண்ணீர் சிந்திய நிலையில் செய்தியாளர்களிடம் கூறியது:

பனிக்கம்பட்டி ஊராட்சி மூலமாக மயானத்திற்கு தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மயானத்திற்கு அருகில் எனக்கும், எனது சகோதரிகளுக்கும் பாதியப்பட்ட 14 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. மழைக்காலத்தில் இப்பகுதி விவசாய நிலங்களில் இருந்து மழைநீர் வெளியேறி, பள்ளம் வழியாக மயானத்தை கடந்து,குட்டையை சென்றடையும்.

தற்போது மயானத்திற்கு தடுப்புச்சுவர் அமைப்பதால், மழைநீர் வெளியேற வழியில்லாமல், எங்களுடைய விவசாய நிலத்தில் மழைநீர் முழுவதும் தேங்கும் அபாயம் உள்ளது. இதனால், விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படும். எனவே, இதற்கு ஆட்சியர் உரிய தீர்வு ஏற்படுத்தித்தர வேண்டும் என்றார்.

## குன்னூரில் ஒரே நாளில் ரூ. 40 கோடி தேயிலைத் தூள் ஏற்றுமதி

**குன்னூர்**

லாரி உரிமையாளர்கள் போராட்டம் முடிவுக்கு வந்ததையடுத்து, ஒரே நாளில் ரூ. 40 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள்கள் செவ்வாய்க்கிழமை ஏற்றுமதி செய்யப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில், தேயிலை பாரம் ஏற்றும் லாரிகள் கடந்த ஒன்றாம் தேதி முதல் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தம் காரணமாக சுமார் ரூ. 60 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள்கள் தேக்கமடைந்தன. இதனால், இத்தொழிலை மட்டுமே நம்பியுள்ள பாரம் தூக்கும் தொழிலாளர்கள், லாரி ஓட்டுநர்கள் உள்ளிட்ட பலரும் பாதிப்பிற்குள்ளாகினர்.இந்நிலையில், 4 கட்டப் பேச்சுவார்தைக்குப்பின் 15 சதவீதம் வாடகை உயர்த்திதருவதாக லாரி புக்கிங் ஏஜென்சிகள் திங்கள்கிழமை இரவு சம்மதம் தெரிவித்தன. இதையடுத்து, லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் விலக்கிக்கொள்ளப்பட்டது. அதைத்தொடர்ந்து, நாட்டின்

பல்வேறு பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப வேண்டிய தேயிலைகள், கொச்சின் உள்ளிட்ட துறை முகங்களுக்கு லாரிகளில் எடுத்துச் செல்லும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில், செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் மட்டும் ரூ. 40 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

## முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.97, சென்னையில் ரூ.3.32.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.71, முட்டைக் கோழி கிலோ ரூ.54.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மாம்பழம் கிலோ ரூ.5க்கு 'கூவிக்கூவி' விற்பனை

**வேதாரண்யம்:**வேதாரண்யத்தில், மாம்பழம் விலை, கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால், கிலோ, ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், தோட்டங்களில் மாம்பழம் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் சுற்று வட்டார கிராமங்களில், 5,000 ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு, மா விளைச்சல் அதிகமாக உள்ளதால், மாம்பழம் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.மாம்பழம் அனைத்தும் தோட்டங்களிலேயே அழுகி வீணாவதால், கிலோ, ஐந்து ரூபாய்க்கு கூவி கூவி விற்பனை செய்யப்படுகிறது. ஒட்டு, செந்துாரம் மாம்பழங்களை மட்டும் கிலோ, எட்டு ரூபாய் நிர்ணயம் செய்து, ஜூஸ் தொழிற்சாலைக்கு வாங்கி செல்கின்றனர்.ஆண்டு தோறும் மா சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளை பாதுகாக்க, அரசு, இப்பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சர்க்கரை ஏற்றுமதிக்கு ஊக்கத் தொகை உயருகிறது:மீண்டும் டன்னுக்கு ரூ. 3,300 கிடைக்கும்



**மும்பை**:சர்க்கரை ஏற்றுமதிக்கான ஊக்கத் தொகையை, மீண்டும் டன்னுக்கு, 3,300 ரூபாயாக நிர்ணயம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.உள்நாட்டில் சர்க்கரை விலையை கட்டுக்குள் வைக்கும் நோக்கில், அதன் ஏற்றுமதிக்கு, ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**முந்தைய அரசு:**இதன்படி, ஒரு டன் சர்க்கரைக்கு வழங்கப்பட்டு வந்த, 3,300 ரூபாய் ஊக்கத் தொகை, கடந்த ஏப்ரல், மே மாதங்களில், 2,277 ரூபாயாக குறைக்-கப்பட்டது.வரும் செப்டம்பரில் முடியும், 2013–14ம் சர்க்கரை பருவத்துடன், இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை கைவிட, முந்தைய அரசு திட்டமிட்டிருந்-தது.இந்நிலையில், கரும்பு விவசாயிகளின் நிலுவையை வழங்கவும், உள்நாட்டில் சர்க்கரை விலை அதிகம் வீழ்ச்சி காணாமல் தடுக்கவும், சர்க்கரை ஏற்றுமதிக்கான ஊக்கத் தொகையை உயர்த்த வேண்டும் என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்ட-மைப்பு வலியுறுத்தி வந்தது.

இதையடுத்து, மத்திய உணவு அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், வேளாண், ஊரக மேம்பாடு உள்ளிட்ட துறைகளை சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.அப்போது, கரும்பு விவசாயிகளின் துயர் துடைக்கவும், சர்க்கரை உற்பத்தியில் ஆலைகள் எதிர்கொள்ளும் இழப்பை குறைக்கவும், பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**அறிவிப்பு:**இதையடுத்து, சர்க்கரை ஏற்றுமதிக்கான ஊக்கத் தொகையை, மீண்டும், டன்னுக்கு 3,300 ரூபாயாக உயர்த்துவது என, அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்-படுகிறது.மேலும், சென்ற பிப்ரவரி முதல், 2015ம் ஆண்டு செப்டம்பர் வரை மொத்தம் 40 லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்யவும், அது வரை ஊக்கத்

தொகை திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், அரசு திட்டமிட்டுள்ளது.இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என, அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடப்பு 2013–14ம் சர்க்கரை பருவத்தின் துவக்கத்தில், 92.98 லட்சம் டன் சர்க்கரை கையிருப்பில் இருந்தது. இத்துடன், 214 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி மற்றும் ஒரு லட்சம் டன் மூலச்சர்க்கரை இறக்குமதி ஆகியவற்றை சேர்த்தால், மொத்தம், 307.98 லட்சம் டன் சர்க்கரை, இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இதே காலத்தில், சர்க்கரைக்கான தேவை, 240 லட்சம் டன்னாகவும், ஏற்றுமதி, 20 லட்சம் டன்னாகவும் இருக்கும் என, கணிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, வரும், 2014–15ம் சர்க்கரை பருவத்தின் துவக்கத்தில், சர்க்கரை கையிருப்பு, 48 லட்சம் டன்னாக இருக்கும்.

**ஏற்றுமதி:**இது, உள்நாட்டின் நான்கு மாத தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என,தெரிகிறது. இது போன்ற சூழலில், ஊக்கத் தொகை குறைவால், சர்க்கரை ஏற்றுமதி சரிவடைந்தால், அதன் விலை உள்நாட்டில் மேலும் சரிவ-டையும்.இது, கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவை சுமையை அதிகரிக்க செய்யும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, சர்க்கரை ஏற்றுமதிக்கான ஊக்கத் தொகையை உயர்த்த திட்டமிட்-டுள்ளதாக கூறப்படுகிறது.

## பால்பண்ணை உதவியாளர் சான்றிதழ் பயிற்சிக்கு விண்ணப்பம் வரவேற்பு

**சேலம்**: கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், ஒரு மாத பால்பண்னை உதவியாளர் சான்றிதழ் பயிற்சி தொடங்கவுள்ளது.

சேலம், கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் முருகேசன் வெளியிட்ட அறிக்கை:

பால்வளத்துறையில், கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்து வருகின்றன. பால்வளத்துறை ஆண்டுக்கு, 10 சதவீதம் வளர்ச்சி கண்டு வருகிறது. இத்துறையில் பயிற்சி பெற்று, தகுதி வாய்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பும் கூடி வருகிறது. சேலத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் அங்கமான, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி,

ஆராய்ச்சி மையத்தில், பால்பண்ணை உதவியாளருக்கான ஒருமாத சான்றிதழ் செயல் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகஸ்டு, 4ம் தேதி துவங்கி, ஒரு மாதம் நடத்தப்படவுள்ளது. பயிற்சி கட்டணம் 1,000 ரூபாய்

குறைந்தபட்ச கல்வி தகுதியாக, தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். கிராமப்புற இளைஞர்கள், விவசாயிகள், பண்ணை மகளிர், சுயஉதவி குழுவினர், பள்ளிக்கல்வியில் இடை நின்றவர்கள், தொழில் முனைவோர் கலந்து கொள்ளலாம். சுய வேலை வாய்ப்பை உருவாக்கி, தொழில் முனைவோராக வளர வாய்ப்புள்ளது. பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன. மேலும், தகவல் பெற, 0427-2410408 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மழையால் பச்சை தீவனங்கள் உற்பத்தி கோபியில் ஆடு வளர்ப்போர் உற்சாகம்

**கோபிசெட்டிபாளையம்**: தடப்பள்ளி பாசனத்துக்கு உட்பட்ட பகுதியில், கடந்த ஓரிரு வாரங்களாக பெய்த மழையால், மேய்ச்சல் நிலங்களில் பச்சை புற்கள் முளைத்ததால், ஆடு வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்ட பாசனத்துக்கு முக்கிய நீர் ஆதாரமாக பவானிசாகர் அணை உள்ளது. இங்கிருந்து, பவானி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர், கொடிவேரி அணை மூலம், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதியில், 24,204 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகிறது.

ஆண்டுக்கு இரு போகங்கள் திறக்கப்படும் நீரால், நெல், வாழை, கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர்.

தமிழகம் முழுவதும் கடும் வறட்சி நிலவியதால், கடந்த இரு ஆண்டுகளாக, ஒரு போகத்துக்கு மட்டும், பொதுப்பணித்துறையால், தண்ணீர் திறக்கப்பட்டது. தவிர, மூன்று முறை, தலா, 15 நாட்கள் என்ற நிலையில், உயிர் நீர் திறக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில், கடந்த ஓரிரு வாரமாக மழை பெய்வதால், பவானிசாகர் அணைக்கு, நீர் வரத்தாகிறது. முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள், தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். தவிர, இம்மழையால், இப்பகுதியில், தரிசாக இருந்த நிலங்களில், பச்சை தீவனங்கள் ஆங்காங்கே முளைத்துள்ளது.

இதனால், ஆடு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும், கோபி பகுதி விவசாயிகளுக்கு, பச்சை தீவன பிரச்னை தீர்ந்துள்ளது. கோபியில் இருந்து, பங்களாப்புதூர் செல்லும் வழியில் உள்ள தடப்பள்ளி பாசனத்துக்கு உட்பட்ட, ஆசாரிமேடு பகுதியில், சமீபத்தில் பெய்த மழையால், பச்சை தீவனங்கள் அதிகளவில் வளர்ந்துள்ளன.

இப்பகுதி விவசாயிகள் தங்கள் நிலத்தில், 100க்கும் மேற்பட்ட ஆடுகளை மேயவிட்டு, வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதுபற்றி, ஆசாரிமேடு விவசாயி கூறுகையில், ""தடப்பள்ளி பாசன பகுதியில், கடந்த வாரம் பெய்த மழையால், பச்சை தாவரம் வளர்ந்துள்ளன. ஆடு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு, பச்சை தீவனம் பற்றாக்குறையாக இருந்தது. பச்சை தீவனத்தை விலை கொடுத்து வாங்கினோம். இம்மழையால், இன்னும் சில நாளுக்கு, தீவன பிரச்னை ஏற்படாது. தொடர்ந்து மழை பெய்து, பாசனத்துக்கு நீர் திறக்கப்பட்டதால், ஆடு, மாடு வளர்ப்பு அதிகரிப்பதுடன், அவற்றை விற்க வேண்டிய நிலை ஏற்படாது," என்றார்.

## "விதை நெல்லுக்கு இனி தட்டுப்பாடு இல்லை" : கோபி கூட்டுறவு சங்கத்தில் 400 டன் இருப்பு

**கோபிசெட்டிபாளையம்**: விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில், கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 400 டன் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், தரமான விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் கூட்டுறவு துறை மூலம், கோவை துடியலூருக்கு அடுத்து, கோபியில் மட்டுமே விதை நெல் உற்பத்தி மையம் செயல்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் மேட்டூர் பாசன பகுதிகளில், விவசாயிகளுக்கு, கோபி கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், தாய் விதை நெல் தரப்படுகிறது.

விவசாயிகள் வயலில் அதனை பயிரிட்டு, வேளாண் துறையின் யோசனைப்படி, அதை விதை நெல்லாக மீண்டும் உற்பத்தி செய்கின்றனர். இவ்வாறு உற்பத்தியாகும் விதை நெல், மீண்டும் சங்கத்துக்கே வழங்கப்படுகிறது.

இந்த விதை நெல், சங்கத்தில் வீரியம் மிகுந்த, அதிக முளைப்பு திறன் கொண்ட விதை நெல்லாக நேர்த்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் விதை நெல், ஆண்டுதோறும் காவிரி டெல்டா பகுதிகளான, திருச்சி, தஞ்சை, திருவாரூர்,

நாகை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு, தலா, 300 டன் விதை நெல் அனுப்பப்படுகிறது.

தவிர, கீழ்பவானி, அமராவதி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசன பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைக்கு, விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த, மூன்று ஆண்டுகளாக, கடும் வறட்சி நிலவியதால், நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு, பாசனத்துக்கு உரிய தண்ணீர் கிடைக்கப்பெறவில்லை.

இதனால், விதை நெல் உற்பத்தி, கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், கடந்தாண்டு, விதை நெல் தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளிசந்தையில் அதிக விலைக்கு விதை நெல் விற்றன.

நடப்பாண்டில், கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 400 டன் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. குருவை சாகுபடிக்கேற்ற ஏ.எஸ்.டி., 16, ஏ.டி.டி.ஆர்., 45 உள்ளிட்ட விதை நெல் ரகங்கள், தயார் நிலையில் உள்ளன. இந்த ரகம், 115 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.

சம்பா சாகுபடிக்கேற்ற, ஏ.டி.டி., 38 மற்றும் 39, பி.பி.டி., 5204, ஐ.ஆர்., 20 ஆகிய, 140 நாட்களில் அறுவடைக்கு தயாராகும். விதை நெல் ரகங்கள், தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு கிடைக்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், உற்பத்தியாகும் விதை நெல் தரம், முளைப்பு திறன், கூடுதல் மகசூல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளதால், மிகுந்த தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுவதால், த மிழக அளவில், கோபி வி தை நெல்லுக்கு, விவசாயிக ள் மத்தியில் மிகுந்த வரவே ற்பு இருந்து வருகிறது, என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>காலதாமதத்தை குறைக்கும் மஞ்சள் வர்த்தகம் செம்மாம்பாளையத்தில் விரைவில் இ-டிரேடிங்</u>

**ஈரோடு**: மஞ்சளுக்கு அதிக விலை கிடைப்பதோடு, நேர விரயத்தை மிச்சப்படுத்தும், இ-டிரேடிங் வர்த்தக முறை, ஈரோடு மாவட்டத்தில் முதன்முறையாக, செயல்பாட்டுக்கு வர உள்ளது.

தமிழகத்தில், மஞ்சள் உற்பத்தியில், ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. கர்நாடகா, ஆந்திரா மஞ்சளுக்கும், ஈரோட்டில் நல்ல விலை கிடைப்பதால், வெளி

மாநிலங்களில் இருந்தும், சத்தியமங்கலம், அந்தியூர், மொடக்குறிச்சி சுற்றுப்புற பகுதிகள் மட்டுமின்றி, திருவண்ணாமலை மாவட்டம், சேலம், ஆத்தூர் பகுதி உள்பட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், இங்கு விற்பனைக்கு வருகின்றன.

ஈரோட்டில் ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம், ரைட் மார்க்கெட், வெளி மார்க்கெட், சேலம், கோபி, ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுகள் உள்ளன. தினமும், சராசரியாக, 8,000 குவிண்டால் வரை, இங்கு மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வருகிறது. ஆனால், போதிய விலை கிடைக்காததால், கடந்த, ஒரு மாதத்தில் மட்டும் குவிண்டால், 1,000 முதல், 1,300 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. பள்ளி, கல்லூரி நேரங்களில், மஞ்சள் விலை, சரிவு விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திரா, மஹராஷ்டிரா மாநிலங்களில், இந்தாண்டு உற்பத்தி அதிகரித்துள்ளதால், தமிழக மஞ்சளுக்கு கிராக்கி குறைந்துள்ளது. இதனால், மஞ்சளுக்கு அதிக விலை கிடைக்கும் வகையில், மின்னணு வர்த்தகமான இ-டிரேடிங் முறை, நசியனூர் ரோடு, செம்மாம்பாளையத்தில் உள்ள மஞ்சள் வியாபாரிகள் சங்கத்தில் ஏலம் நடக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் ஜரூராக நடந்து வருகிறது. இதுகுறித்து அனைத்து தொழில், வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ராஜமாணிக்கம் கூறியதாவது:

விவசாயிகளின் வசதிக்காக, இ-டிரேடிங் மூலம் வர்த்தகம் செய்யும் வகையில், 8.5 லட்சம் ரூபாயில், சாஃப்ட்வேர் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக விவசாயிகள், தங்களது உற்பத்தி மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வரும்போது, ரகசியமாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. உரிய விலை கிடைக்கவில்லை என்று, விவசாயிகள், மஞ்சளை எடுத்து சென்று, மறுநாள் கொண்டு வரலாம். அதிக விலை நிர்ணயிக்கப்படும், மஞ்சளை வியாபாரிகள் வாங்கி செல்வர். அதேபோன்று இ-டிரேடிங்கிலும், விரலி சாம்பிள் காட்டப்பட்டு, வியாபாரிகள், விவசாயிகளிடையே விலை நிர்ணயம் இறுதி செய்யப்பட்ட பிறகே, மஞ்சளின் விலை, வாங்கிய வியாபாரி உள்ளிட்ட தகவல்கள், டிஸ்பிளே செய்யப்படும். வார நாட்களில் நடக்கும் மஞ்சள் ஏலம், காலை, பத்து முதல் மதியம், ஒரு மணி வரை நடக்கிறது. ஆனால் இ-டிரேடிங் செய்வதன் மூலம், ஏலப்பணிகள் விரைந்து முடிவதோடு, வெளிமாநில விவசாயிகளும் வாங்கக்கூடிய வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் அதிக விலை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**பசுமையான மேய்ச்சல் நிலங்கள் கால்நடை விவசாயிகள் மகிழ்ச்சி**

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் சில நாட்களாக பெய்த மழையால் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் வளர்ந்து பசுமையாக உள்ளது. இதனால் கால்நடை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சங்கராபுரம் பகுதியில் இரு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் ஏரி, குளங்கள் வறண்டன. விவசாயிகள் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்ததால் சாகுபடி செய்யாமல் நிலத்தை கரம்பாகவே போட்டு வைத்துள்ளனர். கோடை வெயிலின் தாக்கம், வறட்சி காரணமாக மேய்ச்சல் நிலங்களில் புற்கள் வளராமல் வறண்டது. கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல், புல் கிடைக்காததால் அடிமாட்டு விலைக்கு விவசாயிகள் விற்றனர். கடந்த 15,20 நாட்களாக சங்கராபுரம் பகுதியில் பரவலாக மழை பெய்தது. இதனால் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் வளர்ந்துள்ளது. இதனால் கால்நடை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வாழைத்தார் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**

**வேலாயுதம்பாளையம்**: தவிட்டுபாளையம், நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர் கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என். புகளூர் உள்ளிட்ட பகுதிகளில், விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன், வீசிய சூறாவளி காற்றில் வாழை மரங்கள் முறிந்து விழுந்தது. நடப்பு வாரத்தில் திருமண சீஸன் அதிகம் இருந்தும், வாழைத்தார்கள் குறைந்த விலைக்கே ஏலம் போனது. கடந்த வார,ம் பூவன், 450 ரூபாய், ரஸ்தாளி, 350 ரூபாய், கற்பூரவள்ளி, 400 ரூபாய், பச்சை நாடன், 300 ரூபாய், மொந்தன் வாழை, 600 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு வாரம் பூவன் வாழைத்தார், 250 ரூபாய், ரஸ்தாளி வாழைத்தார், 200 ரூபாய், கற்பூரவள்ளி, 300 ரூபாய், பச்சை நாடன், 200 ரூபாய், மொந்தன் வாழைத்தார், 400 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். நடப்பு வார ஏலத்துக்கு அதிகளவில் வாழைத்தார் வரத்தானதால், வாழைத்தார் விலை கடும் வீழ்ச்சி அடைந்தது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ.45 லட்சத்திற்கு விற்பனை**

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 45 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக, நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நா மகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 979 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,177க்கும், குறைந்த பட்சம், 6,679 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,539க்கும், குறைந்த பட்சம், 5,669 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 17,000க்கும், குறைந்த பட்சம், 9,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 45 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## முடங்கி போன "பயோ-டீசல்' திட்டம் : முடங்கி போன "பயோ-டீசல்' திட்டம்

**கிருஷ்ணகிரி**: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனத்துறை மூலம் துவங்கப்பட்டு, முடக்கப்பட்ட "பயோ - டீசல்' உற்பத்தி திட்டத்தை மீண்டும் துவங்க வேண்டும்' என மலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலக அளவில் வாகனங்களில் இருந்து வெளியேறும், கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவால், ஓசோன் படலம் வெகுவாக பாதிக்கப்பட்டு, நாளுக்கு நாள் வெப்பநிலை அதிகரித்து கொண்டே வருகிறது. இதனால், பூமியில் பல்வேறு இயற்கை மாற்றங்கள் ஏற்பட்டு பல பகுதிகளில் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, அறிவியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகில் பெட்ரோல் மற்றும் டீசல் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு மாற்றாக, "பயோ - டீசல்' உற்பத்தியை பெருக்க அனைத்து நாடுகளும் பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் மரபு சாரா எரிசக்தி துறை சார்பில், "பயோ-டீசல்' மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வினியோகம் செய்ய தமிழகம் முழுவதும், நான்கு மலை

கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது. இதில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஜோடுகரை மற்றும் பீமன்கட்டு ஆகிய இரு மலை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது.

கிருஷ்ணகிரியை அடுத்த கோபசந்திரத்தில், "பயோ - டீஸல்' உற்பத்தி மையம் கடந்த, 2004ம் ஆண்டு வனத்துறையால் துவங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள காட்டுப்பகுதி மற்றும் கிராம புறங்களில் உள்ள புங்கன் மரத்தில் இருந்து விதைகளை சேகரித்து வந்து இயந்திரம் மூலம் நசுக்கி எண்ணெய் எடுக்கப்பட்டு, அதனை சுத்திகரித்து, "பயோ - டீஸல்' உற்பத்தி செய்யப்பட்டது.

இதன் மூலம் ஜோடுகரை கிராமத்தில், 41 வீடுகளுக்கும் மற்றும் பீமன் கட்டு கிராமத்தில், 50 வீடுகளுக்கும் மின் வசதி செய்யப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்படும் "பயோ - டீஸல்' மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வனத்துறை வாகனங்களுக்கு எரிபொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கோபசந்திரம் "பயோ - டீஸல்' உற்பத்தி மையத்தில் திட்டம் துவங்கிய போது நாள் ஒன்றுக்கு, 500 லிட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. காடுகளில் உள்ள புங்கன் விதைகளை, மலைவாழ் மக்கள் சேகரித்து, வனத்துறையினருக்கு கொடுத்தனர். இதனால், வேலை வாய்ப்பின்றி இருந்த மலை வாழ்மக்களுக்கு வருமானமும் கிடைத்தது.

கடந்த, 2006ம் ஆண்டு முதல் கோபசந்திரம், "பயோ - டீஸல்' உற்பத்தி மையம் மூடப்பட்டது. "பயோ - டீஸல்' உற்பத்தி மையம் மூடப்பட்டபோது "காடுகளில் போதிய புங்கன் விதை கிடைக்காத காரணத்தால், உற்பத்தி தடைப்பட்டு மையம் மூடப்பட்டதாக' வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காடுகள் மற்றும் கிராம பகுதிகளில் சேர்த்து, மொத்தம் ஒரு மில்லியன் புங்கன் மரங்கள் உள்ளதாகவும், அதில் இருந்து விதைகளை சேகரித்தால், ஆண்டு தோறும் தங்கு தடையின்றி உற்பத்தி செய்ய முடியும் என்றும் இயற்கை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் வரும் காலங்களில், பெட்ரோல், டீஸல் உற்பத்தி குறைந்து எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பெட்ரோல் மற்றும் டீஸலுக்கு மாற்றான, எரிபொருளை கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட "பயோ - டீஸல்' உற்பத்தி மையத்தை மீண்டும் இயக்க வேண்டும்' என மலை கிராம மக்களும், இயற்கை ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனத்துறை மூலம் துவங்கப்பட்டு, முடக்கப்பட்ட "பயோ - டீஸல்' உற்பத்தி திட்டத்தை மீண்டும் துவங்க வேண்டும்' என மலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலக அளவில் வாகனங்களில் இருந்து வெளியேறும், கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவால், ஓசோன் படலம் வெகுவாக பாதிக்கப்பட்டு, நாளுக்கு நாள் வெப்பநிலை அதிகரித்து கொண்டே வருகிறது. இதனால், பூமியில் பல்வேறு இயற்கை மாற்றங்கள் ஏற்பட்டு பல பகுதிகளில் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, அறிவியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகில் பெட்ரோல் மற்றும் டீஸல் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு மாற்றாக, "பயோ - டீஸல்' உற்பத்தியை பெருக்க அனைத்து நாடுகளும் பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் மரபு சாரா எரிசக்தி துறை சார்பில், "பயோ-டீஸல்' மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வினியோகம் செய்ய தமிழகம் முழுவதும், நான்கு மலை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது. இதில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஜோடுகரை மற்றும் பீமன்கட்டு ஆகிய இரு மலை கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது.

கிருஷ்ணகிரியை அடுத்த கோபசந்திரத்தில், "பயோ - டீஸல்' உற்பத்தி மையம் கடந்த, 2004ம் ஆண்டு வனத்துறையால் துவங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள காட்டுப்பகுதி மற்றும் கிராம புறங்களில் உள்ள புங்கன் மரத்தில் இருந்து விதைகளை சேகரித்து வந்து இயந்திரம் மூலம் நசுக்கி எண்ணெய் எடுக்கப்பட்டு, அதனை சுத்திகரித்து, "பயோ - டீஸல்' உற்பத்தி செய்யப்பட்டது.

இதன் மூலம் ஜோடுகரை கிராமத்தில், 41 வீடுகளுக்கும் மற்றும் பீமன் கட்டு கிராமத்தில், 50 வீடுகளுக்கும் மின் வசதி செய்யப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்படும் "பயோ - டீஸல்' மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வனத்துறை வாகனங்களுக்கு எரிபொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கோபசந்திரம் "பயோ - டீஸல்' உற்பத்தி மையத்தில் திட்டம் துவங்கிய போது நாள் ஒன்றுக்கு, 500 லிட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. காடுகளில் உள்ள புங்கன் விதைகளை, மலைவாழ் மக்கள் சேகரித்து, வனத்துறையினருக்கு கொடுத்தனர்.

இதனால், வேலை வாய்ப்பின்றி இருந்த மலை வாழ்மக்களுக்கு வருமானமும் கிடைத்தது.

கடந்த, 2006ம் ஆண்டு முதல் கோபசந்திரம், "பயோ - டீசல்' உற்பத்தி மையம் மூடப்பட்டது. "பயோ - டீசல்' உற்பத்தி மையம் மூடப்பட்டபோது "காடுகளில் போதிய புங்கன் விதை கிடைக்காத காரணத்தால், உற்பத்தி தடைப்பட்டு மையம் மூடப்பட்டதாக' வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காடுகள் மற்றும் கிராம பகுதிகளில் சேர்த்து, மொத்தம் ஒரு மில்லியன் புங்கன் மரங்கள் உள்ளதாகவும், அதில் இருந்து விதைகளை சேகரித்தால், ஆண்டு தோறும் தங்கு தடையின்றி உற்பத்தி செய்ய முடியும் என்றும் இயற்கை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் வரும் காலங்களில், பெட்ரோல், டீசல் உற்பத்தி குறைந்து எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பெட்ரோல் மற்றும் டீஸலுக்கு மாற்றான, எரிபொருளை கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட "பயோ - டீசல்' உற்பத்தி மையத்தை மீண்டும் இயக்க வேண்டும்' என மலை கிராம மக்களும், இயற்கை ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வறட்சியின் கோர தாண்டவத்தால் தேனியில் தென்னைகள் அழிப்பு

**ஆண்டிபட்டி** : தேனி மாவட்டம் ராஜதானியில், வறட்சியால் நிலத்தடி நீர் ஆதாரம் வற்றிப் போனதால், பலன் கொடுத்த தென்னை மரங்களை பராமரிக்க முடியாமல் வெட்டி அழிப்பதுடன், அவற்றை அப்புறப்படுத்த முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

ஆண்டிபட்டி அருகே கதிர்நரசிங்கபுரம், ராஜதானி, தெப்பம்பட்டி, சேவாநிலையம், பாலக்கோம்பை, அழகாபுரி, ராயவேலூர் உட்பட பல கிராமங்கள் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளன. மலைப்பகுதியில் பெய்யும் மழையால் பெருக்கெடுத்து ஓடும் நாகலாறு ஓடையால், இப்பகுதியில் உள்ள 10க்கும் மேற்பட்ட கண்மாய்களில் நீர் தேங்கும்.

கண்மாய்கள் நிரம்புவதால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் சமன் செய்யப்பட்டு, ஆண்டு முழுவதும் இறவை பாசனம் நடைபெறும். கடந்த பல ஆண்டுகளாக போதுமான மழை இல்லாததால், இப்பகுதி கண்மாய்கள் நிரம்பவில்லை. இதனால்,

நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்பட்டது. வற்றாமல் இருந்த பல கிணறுகளும் வறண்டதால், விவசாய நிலங்கள் காயந்தன.

பல நூறு ஏக்கர் பாசன நிலங்கள், மழை பெய்தால் மட்டுமே பயன்பெறும் மானாவாரி நிலங்களாகி விட்டன. நிலத்தடி நீரை நம்பி இருந்த தென்னந்தோப்புகள் பலவும், காயந்ததால் வெட்டி அழிக்கப்படுகின்றன. விவசாயிகள் பலரும், மாற்றுதொழிலுக்கும், பிழைப்பு தேடி வெளியூர்களுக்கும் சென்று விட்டனர். வறட்சியால் பாதிப்படைந்துள்ள ராஜதானியைச் சேர்ந்த பி.கருப்பாயி கூறியதாவது: வற்றாத கிணறு கொண்ட ஏழு ஏக்கர் நிலத்தில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயம் செய்து வந்தோம். ஆண்டு முழுவதும் பலன் தந்த 350 தென்னை மரங்களை பராமரித்து வந்தோம். கிணறுகளில் தண்ணீர் வற்றியதால், பாதிப்பு ஏற்பட்டது. தென்னை மரங்களை காப்பாற்ற, ஆழ்குழாய் அமைத்தும் பலன் இல்லை. பல ஆண்டுகளாக ஓடைகளில் நீர் வரத்து இல்லாததால், நிலத்தடி நீராதாரம் இல்லை. வீட்டில் இருந்த இளைய தலைமுறையினர் விவசாயத்தை தொடர முடியாததால், வேறு வேலை தேடி வெளியூர் சென்று விட்டனர். பல ஆண்டுகளாக பராமரித்த தென்னை மரங்களை வளர்க்க முடியாமல் வெட்டி விட்டோம். வெட்டிய மரங்களை என்ன செய்வது என்று தெரியாததால் அப்படியே கிடக்கிறது. மரங்கள் குறைந்த விலைக்கே போவதால், கூலிச்செலவு கூட கிடைக்காது. இதனால் மரங்களை அப்புறப்படுத்த முடியவில்லை. இவ்வாறு சோகத்துடன் கூறினார்.

## உரம், பூச்சி மருந்து விற்பனையை கண்காணிக்க நடவடிக்கை தேவை

**கம்பம்** : போலிகள் உலா வருவதை தடுக்க, உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனையை, தேனி மாவட்ட தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும், என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைப் பெரியாறு பாசனத்தில், தேனி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.நெல் தவிர்த்து, வாழை, திராட்சை, காய்கறிகள் அதிக பரப்பில் சாகுபடியாகிறது. நெல் சாகுபடியில், பாக்டம்பாஸ் உரம் அடிஉரமாக போடப்படும். பின்னர் நடவுக்கு பின் 25 நாட்களில் மீண்டும் ஒரு முறை பாக்டம்பாஸ், டிஏபி உரங்கள் இடப்படும். பயிர் நன்றாக வளர்ச்சியடைய இந்த உரங்கள் பயன்படுகிறது. மாவட்டத்தில் உரங்கள் விற்பனை, விலை, கலப்படம் போன்ற விஷயங்களில் அதிகாரிகள் கண்காணிக்க

வேண்டும், என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், " கடந்த செப்டம்பரில், தேனியில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தின் இருப்பு வைக்கப்பட்டிருந்த உரங்களை ஆய்வு செய்த அதிகாரிகள் , அங்கிருந்த 117 டன் பாக்டம்பாஸ் உர மூடைகளை, விற்பனை செய்ய வேண்டாம், என்று தடை விதித்தனர்.அதன் பிறகு, போடி, கம்பம் ஆகிய ஊர்களில் போலி உரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தோடு, கூட்டுறவு சங்கங்களில் இருந்த உரங்களை விற்பனை செய்ய வேண்டாம், என உத்தரவிடப்பட்டது. இந்நிலையில், கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போகத்திற்கான ஆரம்பகட்டப் பணிகளை தற்போது விவசாயிகள் துவக்கியுள்ளனர். மானாவாரி நிலங்களில் சூரியகாந்தி, எள் போன்ற பயிர்களை விதைப்பு செய்ய தீவிரம் காட்டி வருகின்றனர். எனவே, விற்பனை செய்யப்படும், உரம் மற்றும் பூச்சி மருந்துகளை கண்காணிக்க, அதிகாரிகள் முன்வர வேண்டும். "போலி'கள் உலா வருவதை இந்த கண்காணிப்பின் மூலம் தடுக்க முடியும், என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**



தமிழகத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு பரவலாக பெய்து வந்த மழை காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும் தீவிரம் அடைந்தது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயரத்தொடங்கியது. தற்போது காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை நின்று விட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது.

கடந்த வாரம் அணைக்கு வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அது நேற்று முன்தினம் வினாடிக்கு 2,160 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. இந்த தண்ணீர் மேலும் குறைந்து நேற்று வினாடிக்கு 1,827 கனஅடியாக வந்தது. அப்போது அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 800 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நீர்திறப்பைவிட தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. அதாவது, நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 44.27 அடியாக இருந்தது. இது நேற்றைய நிலவரப்படி 44.37 அடியாக உயர்ந்தது. இருந்தபோதும், நீர்வரத்து மேலும் குறையுமானால் அணையின் நீர்மட்டம் மீண்டும் குறைய வாய்ப்பு உள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மழையில் நனைந்து 1200 டன் நெல் வீண்

**சென்னை**, : திருவாரூரில் இருந்து நெல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு சரக்கு ரயில் நேற்று முன்தினம் இரவு செங்கல்பட்டு ரயில் நிலையம் வந்தது. அங்குள்ள வெட்டவெளி சரக்கு இறக்கும் தளத்தில் மூட்டைகள் அடுக்கப்பட்டன. மேலும் இரவு என்பதால் லாரியில் மூட்டைகளை ஏற்றாமல் சென்றுவிட்டனர்.அன்றிரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததால் 1200 டன் நெல்மூட்டைகளும் நனைந்து வீணானது. இவற்றின் மதிப்பு பல கோடி என கூறப்படுகிறது. நேற்று காலை நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் வந்து நெல் மூட்டைகளை பார்வை யிட்டனர். அதன்பிறகு நனைந்த நெல்மூட்டைகள் லாரிகள் மூலம் திம்மாவரம் நுகர்பொருள் வாணிப கழக குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ''நீடாமங்கலம் பகுதியில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு திம்மாவரம் அரிசி ஆலைக்கு நெல்மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. மழைகாரணமாக மூட்டைகள் நனைந்துவிட்டன. இவற்றை காயவைத்து அரைக்கவேண் டும். இதில் அதிகளவில் சேதமாகும். அரிசியும் நன்றாக இருக் காது. தார்பாய் போட்டிருந்தால் நெல் மூட்டைகளை பாதுகாத்திருக்கலாம்'' என்றனர்.

### விவசாயிகள் கல்வி சுற்றுலா

**விளாத்திகுளம்**, : விளாத்திகுளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி ராணி ஆலோசனையின் பேரில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் மாநில அளவிலான விவசாயிகள் கண்டறியும் கல்வி சுற்றுலா, திருத்துறைப்பூண்டி ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தேசிய

நெல் திருவிழா நடந்தது. இதில் பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்தும், இயற்கை விவசாய முறைகள் குறித்தும், வறட்சியை தாங்கி வளரும் நெல் ரகங்கள் குறித்த கண்காட்சியும், கருத்தரங்கமும் நடந்தது. இதில் விளாத்திகுளம் வட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர் பங்கேற்று பயன் பெற்றனர். சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் கோவிந்தராஜ், சுதாகர் மற்றும் கௌதமி ஆகியோர் செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் சண்முகம், மகேந்திரக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.